[9th August 1960

Sales Tax on foodgrains transported by lorries

* 52 Q.—**Sri A. VEDARATHNAM :** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) லாரி மூலம் ஏற்றிச் செல்லும் நெல், அரிசி முதலிய தானியங்களுக்கு விற்பனை வரி செலுத்தாமல் கடத்தப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(ஆ) இதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது ?

The Hon. Sri R. VENKATARAMAN : (அ) Yes.

(ஆ) The Government have established check-posts at important places and they have also employed detection staff in each district to check evasions of sales tax on goods transported by lorries, boats, railways, etc.

Sri A. VEDARATHNAM : இந்த லாரி மூலம் ஏற்றிச் செல்லப் படுகிற தானியங்கள் எல்லாம் வியாபாரிகள் அனுப்பிய போதிலும் கூட மிராசுதார்கள் பேரிலேயே அனுப்புவதாகக் கணக்கு வைக்கிறார்கள். இதன் காரணமாக வரியை ஏமாற்றச் சந்தர்ப்பம் இருக்கிறது. அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிககை எடுத்துக் கொள்ளுகிறது ?

The Hon. Sri R. VENKATARAMAN: வரியை ஏமாற்றுகின்ற முறை பல உண்டு. அதிலே இது ஒன்று. அதற்காகத்தான் "டிடெக்ஷன் ஸ்டாப்" போட்டிருக்கிறோம். உண்மையாகவே மிராசுதார்கள் அண்டை ராஜ்யங்களுக்கு அனுப்புகிறார்களா அல்லது போலியாக அனுப்புகிறார்களா என்பதைத் துப்பறியும் அதிகாரிகள் கண்டுபிடிக்கிறார்கள்.

Sri A. DURAISAMI REDDIAR: லாரியிலே சரக்கை ஏற்றி தவறுதலான அட்ரஸை எழுதி விட்டு அனுப்புவதால லாரிக்காரர்கள் ப்ளாக் மார்க்கெட்டில் சரக்கை விற்றுவிடுகிறார்கள. இதனால் "சேல்ஸ் டாக்ஸ்" கொடுப்பது ஏமாற்றப்பட்டு வருகிறது. இந்த லாரிக்காரர்களின் மீது நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன்வருமா ?

The Hon. Sri R. VENKATARAMAN: இப்போது லாரி மூலமாக சரக்குகள் கொண்டு போனால் அந்த லாரிக்காரர் தன்னுடன் ஒரு பில்லை கொண்டு போக வேண்டும். "கன்ஸைனர்" யார், "கன்ஸைனி" யார், எந்த இடத்தில் இருக்கிறார் என்பதெல்லாம் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கும். அந்த அட்ரஸை வாங்கிக்கொண்டுதான் லாரிக்காரர் சாமான்களை ஏற்றிக்கொண்டு போகவேண்டும். இந்த விதமான பில்களின் ஒரு "டூப்ளிகேட் காப்பி"-யைச் சர்க்கார் கேட்டால் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். முதலிலே எந்த இடத்தில் சரக்கு ஏற்றி

9th August 1960]

அனுப்பியிருக்கிறார் என்று சொல்லியிருக்கிறாரோ அங்கே அட்ரஸ் இருக்கிறதா என்று பார்க்கிறோம். அவ்வாறு இல்லாவிட்டால் லாரிக்காரர் மீது நடவடிக்கை எடுக்கிறோம்.

Distribution of cattle to development blocks

53 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) 1960-ம் வருஷத்தில் பிளாக் டெவலப்மெண்டுகள் மூலமாக எத்தனை பசு மாடுகளும், எருமைகளும், இதர கால் நடைகளும் வழங்கப்பட திட்டமிடப்பட்டிருக்கிறது?

(ஆ) இதற்காக என்னென்ன விதமான (Hariana and other) வர்க்க கால்நடைகள், எந்தெந்த இடங்களிலிருந்து, எத்தனை கால்நடைகள் வாங்கப்படும்?

(இ) இத் திட்டத்துக்காக எவ்வளவு தொகை தேவைப் படும்?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) The number of bulls and rams to be supplied depends on the demand in each block. Provision is made for the supply of 10 bulls, 5 Murrah buffaloes and 50 pedigree rams in a five-year period in each block. Based on this, the number of bulls, buffaloes and rams to be supplied during 1960–61 in block areas will be about 394 bulls, 194 buffaloes and 1,970 rams.

(ஆ) The varieties of breed to be supplied depends on the tracts in which the blocks lie. For draught purposes, breeds such as Kangayam, Hallikar, Alambadi, Umblachery, Burgur, etc., and for milch purposes Red Sindhi, Gir, Tharparka, Sahiwal are distributed. Regarding buffaloes, Murrah breed of buffaloes are supplied. The breeding bulls are purchased by the Block Development Officer from the key village areas. The rams required are purchased by the Block Development Officers through the Sheep and Goat Development Officer, Madras.

(இ) A sum of Rs. 7,500 for the supply of bulls and buffaloes and another sum of Rs. 1,500 for the supply of pedigree rams are provided for a period of five years for each block.

SRI P. G. MANICKAM: மேற்கண்ட மாடுகளோ, எருமைகளோ ஒருவருக்குக் கொடுக்கப்பட வேண்டுமானால் அவர்கள் பாதித் தொகையைக் கட்டவேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது. இந்தப் பாதித் தொகையைக் கட்ட முடியாத நிலைமையில் குறிப் பாக ஹரிஜனங்கள்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஹரிஜன இலாகா மூலம் எருதுகள் வாங்கிக் கொடுப்பது போன்று, இந்த ப்ளாக் டெவலப்மெண்ட் திட்டத்தின் மூலம் இலவசமாகக் கால் நடைகள் வாங்கிக்கொடுக்க உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: தனியாக ஹரிஜனங் களுக்கு என்று கொடுக்க வேண்டிய சலுகைகளை ஹரிஜன இலாகா மூலமாக வழங்குகிறார்கள். ஆகவே, இந்தக் கேள்வியை ஹரிஜன இலாகா மந்திரிக்குப் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.